மலர் 1 இதழ் 1 ஜூலை, 2016 ISSN : 2454-3993

# பண்பாட்டு நோக்கில் ஏறு தழுவல்

**மோகன் குமாரமங்கலம்**
ஆய்வாளர், தமிழ்த் துறை,
மதுரைக் கல்லூரி,
மதுரை.

தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றான ஏறு தழுவுதல் என்பது கால்நடை வளர்ப்புச் சமூகத்தோடு தொடர்புடைய மரபான விளையாட்டு. வேட்டைச் சமூக நிலையிலிருந்து இன்றைய நாகரிக சமூகமாக உருவெடுத்துள்ள மனித சமூக வளர்ச்சிக் கட்டத்தில் கால்நடை மந்தைகள் தனிச்சொத்தாக மாற்றமடைந்த சூழலே பின்னர் ஏற்பட்ட பல மாறுதல்களுக்கு அடிப்படையாக இருந்தது. கால்நடை வளர்ப்புக்கென்று கண்டுபிடித்த தானிய உற்பத்தி வயல் விவசாயத்திற்கு முன்னோடியாகியது. அவற்றின் தேவையை ஒட்டி வளர்ந்த கைத்தொழில் வளர்ச்சியும் சேர்ந்து அதிகப்படியான உற்பத்தியைச் சாதிக்க அந்த உபரி உற்பத்தி உழைப்பவன், உழுவிப்பவன் என்ற வர்க்க சமூகத்தை உருவாக்கியது. கால்நடை வளர்ப்புச் சமூகம் அவ்வளவு எளிதில் உருவாகியிருக்க முடியாது. அதற்கு காட்டு விலங்குகளாக இருந்த ஆக்களையும் எருதுகளையும் வீட்டில் வளர்க்கும் விலங்குகளாகப் பழக்கப்படுத்த அம்மக்கள் கூட்டம் நிறைய இழந்திருக்கும். வேறு எந்த நாட்டையும்விட ஆக்களை வீட்டு விலங்காகத் தகவமைத்ததில் இந்தியச் சமூகத்திற்கு காலப் பழமையுண்டு என்பது அறிஞர்கள் கருத்து.

குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் குறித்து ஆய்வு செய்த ஏங்கல்ஸ் இந்தப் படிநிலை வளர்ச்சியைச் சரியாகவே விளக்கியுள்ளார். இனக்குழுக்கள் குலங்களாகவும், சில ஆதிக்குலங்கள் சேய் குலங்களாகவும், பிரிந்திருந்தன. ஆள்பவர், ஆளப்படுபவர் என்ற பிரிவினை தோன்றாது ஆணுக்கும், பெண்ணுக்குமான உழைப்பின் அடிப்படையிலான பிரிவைத் தவிர வேறு வேலைப் பிரிவினை தோன்றியிராத பொதுவில் உற்பத்தி செய்து எல்லாவற்றையும் பொதுச் சொத்தாக பயன்படுத்திய காலமொன்று இருந்தது. “ஆனால் மனிதன் எல்லா இடங்களிலும் இந்தக் கட்டத்தில் நின்று விடவில்லை. ஆசியாவில் வீட்டுக்குக் கொண்டு வந்து பழக்கி கொட்டிலில் இனவிருத்தி செய்யக் கூடிய விலங்குகளை மனிதன் கண்டான். காட்டெருமையை வேட்டையாட வேண்டியிருந்தது. வீட்டுப் பசு ஆண்டுதோறும் கன்று ஈன்றது பாலும் கொடுத்தது. மிகவும் முன்னேற்றமடைந்த சில இனக்குழுக்கள் – ஆரியர்கள் செமைட்டுகள் துரானியர்கள் கூட – காட்டு விலங்குகளை வீட்டில் வைத்துப் பழக்குவதையும் பின்னால் கால்நடைகளை வளர்த்து கவனித்துக் கொள்வதையும் தமது பிரதான தொழிலாகக் கொண்டனர். அநாகரிகர்களின் பொதுவான கூட்டத்திலிருந்து கால்நடை வளர்க்கும் இனக்குழுக்கள் தனியே பிரிந்து சென்றன. இதுதான் சமுதாய ரீதியில் ஏற்பட்ட முதல் மாபெரும் வேலைப்பிரிவினை ஆகும். கால்நடை வளர்த்த இந்த இனக்குழுக்கள் மற்ற அநாகரிகர்களை விட அதிகப்படியான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தது மட்டுமின்றி பல்வேறு விதமான பொருட்களையும் அதிக அளவில் உற்பத்தி செய்தனர். அவர்களிடம் பால் பாலால் தயாரிக்கப்பட்ட பொருள்கள், இறைச்சி, தோல்கள், கம்பளி ரோமம், ஆட்டு ரோமம் ஆகியவையும் இருந்தன. மூலப்பொருட்களின் அளவு அதிகரித்ததால் நூல்கள், துணிமணிகள் முன்னைவிட அதிகமான அளவில் பயன்படுத்தப்பட்டன. இது முதல் தடவையாக முறையான பண்டப் பரிவர்த்தனையைச் சாத்தியமாக்கியது.

கால்நடை மந்தைகள் தனியாகப் பிரிக்கப்பட்ட சொத்தாக மாற்றப்படுதல் ஆரம்பமான பொழுது தனிநபர்களிடையே பரிவர்த்தனை நடைபெறுவது மென்மேலும் அதிகரித்து கடைசியில் அது ஒன்றே பரிவர்த்தனை வடிவமாகிவிட்டது. கால்நடை என்ற பண்டமே மற்ற எல்லாப் பண்டங்களையும் மதிப்பிடுவதற்குரிய பண்டமாக ஆயிற்று. மற்ற பண்டங்களுக்கு மாற்றுப் பண்டமாக அது எங்கும் மறுப்பில்லாமல் பெற்றுக் கொள்ளப்பட்டது. சுருக்கமாகக் கூறினால் அது பணத்தின் செயற்பாட்டை மேற்கொண்டது. இந்தக் கட்டத்தில் அது பணத்தைப் போலவே பயன்பட்டு வந்தது." என்று விளக்குவார் ஏங்கல்ஸ். அவருக்கு தென் திராவிடச் சமூகம் குறித்த தரவுகள் கிடைக்காதது வரலாற்றுக்கு இழப்புதான். தமிழில் மாடு என்றால் செல்வம் என்றும் பணத்தைக் குறிக்க மாடை என்ற சொல் தமிழில் உண்டு என்பதும் ஏங்கெலின் கண்டுபிடிப்பிற்கு வலுச்சேர்ப்பதே!

மனித சமூகத்தின் பரிணாம வளாச்சிப் படிநிலைகளை பழந்தமிழ் இலக்கியங்களிலும், தமிழர்களின் பண்பாட்டு மரபுகளிலும் கண்டடைய அத்தனை சாத்தியங்களும் உள்ளன. கால்நடை வளர்ப்புச் சமூகத்தின் கண்டடைவான ஏறு தழுவலை இத்தகைய இயங்கியல் பார்வையில் பார்க்க முடியும். கால்நடைத் தொகுதிகளை உடைமையாகப் பெற்ற வளர்ச்சியடைந்த முல்லை நிலத்தவரிடமிருந்து வேட்டை, அரைவேட்டைச் சமூக வளர்ச்சிக் கட்டத்தில் இருந்த குறிஞ்சி நில மக்கள் கால்நடைகளை கவர்ந்துகொண்டு செல்லும் வாழ்க்கைத் தேவைதான் வெட்சியும் கரந்தையும். அதற்கு முந்திய கட்டம் ஒன்று இருந்தது காடுகளுக்குள் திரிந்த எருதுகளையும், காட்டுப் பசுக்களையும் பிடிக்கச் சென்ற கட்டம். காட்டு மாடுகளைப் பிடித்தல், அவற்றை வீட்டு விலங்காகப் பழக்குதல், அந்தப் பயிற்சியை அச்சமூகத்து சிறுவர் இளைஞர் முதலான மனிதர்களுக்கு பழக்குதல் என்பன ஒரு தொடர் சமூகச் செயல்பாடாக இருந்திருக்க வேண்டும். அதனை வெற்றிகரமாகச் செய்ததாலே அச்சமூகம் ஆநிரை உடைமைச் சமூகமாக வளர்ந்து தனித்து ஒதுங்கியிருக்கிறது. கலித்தொகையில் வரும் கோட்டினத்து ஆயர், கோவினத்து ஆயர், புல்லினத்து ஆயர், புகர் இனத்து ஆயர், பெற்றத்தார் என்று ஆயர் மக்கள் அழைக்கப்படுவதன் மூலம் அறியலாம். ஒவ்வொரு சமூகமும் அச்சமூக வளர்ச்சிக்கான மரபான அறிவைப் பெற்றிருந்தது. பாலைத் திணையில் குன்று சார்ந்த பகுதியில் வாழும் மக்கள் சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் படைக்களப் பயிற்சி கொடுத்து அதனை அரங்கேற்றி காட்டும் விதமாக "பூந்தொடை விழா" நடத்திய குறிப்புகள் உள்ளன. கால்நடை வளர்ப்புச் சமூகத்தின் கண்டடைவான ஏறு தழுவலை இத்தகைய இயங்கியல் பார்வையில் பார்க்க முடியும்.

கலித்தொகையில் ஏறு தழுவுதல் என்று குறிப்பிடப்பட்டுள்ள மாடு அணைதல் இன்று நடைமுறையில் சல்லிக்கட்டு, ஜல்லிக்கட்டு மஞ்சுவிரட்டு, வேலி மஞ்சுவிரட்டு, வட மஞ்சுவிரட்டு, எருது கட்டு, வட மாடு, காளை விரட்டு, ஏறு விடுதல் என பலவாறு அழைக்கப்படுகிறது. இவற்றின் தன்மை அடிப்படையில் மூன்றாகப் பிரிக்கலாம்.

மஞ்சு விரட்டு, சல்லிக்கட்டு, எருது கட்டு

**மஞ்சு விரட்டு**

மஞ்சு + வெருட்டு → மஞ்சிவிரட்டு – மஞ்சுவிரட்டு = ஏறு (காளை) தழுவல் = சல்லிக்கட்டு → மஞ்சு விரட்டு

மஞ்சு + வெருட்டு → மஞ்சிவிரட்டு – மஞ்சுவிரட்டு = ஏறு (காளை) தழுவல் = சல்லிக்கட்டு → ஜல்லிக்கட்டு.

மஞ்சு என்ற சொல்லுக்கு யானையின் முதுகு என்று பொருளும் உண்டு. யானையின் முதுகில் பயணம் செய்வது, வீரமாகக் கருதப்படுகிறது. அரசன் மட்டுமே செய்ய முடியும். அதற்கு ஈடான வீரம் உடைய விளையாட்டு மஞ்சு விரட்டு. மஞ்சு என்றால் முதுகு. காளையின் முதுகை வெருட்டி பிடிப்பது என்றும் கருதலாம்.

திறந்த வெளியில் காளைகளை அவிழ்த்து விட்டு அவற்றை விரட்டிச் சென்று முதுகிற்குப் பின்னால் சுதாரித்து நின்று கொண்டு வெருட்டி (அஞ்சச் செய்து) அதன் கவனத்தைத் திசை திருப்பி அதன் கவனம் பிசகிய நேரத்தில் காளையை அணைபவர்கள் தோதாகக் கூடி அணைந்து விடுவார்கள். இது காட்டில் திரிந்த காட்டு மாடுகளைப் பிடித்து வந்த தொல் நினைவுகளின் எச்சத்தை நினைவுபடுத்தும் நிகழ்த்துதல்களாகக் கருத முடியும்.

**எருது கட்டு**

ஒவ்வொரு ஊர்களிலும் சூழலுக்கு ஏற்றாற்போல் வெவ்வேறு விதமாக நடத்தப்படுகிறது. இதுவே இவ்விளையாட்டின் தோற்றத் தேவையை மீட்டுருவாக்க உதவுகிறது. மதுரை மாவட்டம் செக்கானூரணிக்கு அருகில் எருது கட்டு நடத்தப்படுகிறது. சிறுமலையிலிருந்து வெட்டி வரப்பட்ட காட்டுக் கொடிகளில் வைக்கோலைச் சுற்றி 15–20 மீட்டர் (45–60அடி)நீளமுள்ள பிரியாகத் திரித்து வடம் செய்து எருதின் கழுத்தில் ஒரு முனையையும் மறுமுனையை அவிழ்த்துவிட்டுக் காளையை விரட்டிச் சென்று அணையப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்திற்கருகில் பல்லாக்குளம் கிராமத்தில் நீண்ட கயிற்றில் காளையைக் கட்டிப்போட்டு வைத்து அதனை அணைகிறார்கள்.

சிவகங்கை மாவட்டம் பொதும்புவில் ஒரு மாட்டை வடத்தால் கட்டிப் போட்டுவிட்டு தனி ஆளாய்ச் சென்று மாட்டின் கழுத்தில் உள்ள வடத்தை அவிழ்த்து விடுவது தான் எருது கட்டு.

வட மாவட்டங்களில் 20அடி நீளக் கயிற்றால் காளையைக் கட்டி இருபுறமும் ஆண்கள் இழுத்துப் பிடிக்க ஒருசிலர் மட்டும் அதன் முன்னே நின்று கொம்பில் கட்டப்பட்ட பரிசை எடுப்பர். இது வட மஞ்சுவிரட்டு என அழைக்கப்படுகிறது.

எருது கட்டு முறையில் வடத்தின் தேவை புரிகிறது. வடத்தை எருதில் கட்டுவதன் மூலம் அதன் சக்தி குறைக்கப்படுகிறது, ஏனென்றால், ஒவ்வொரு வடத்தின் எடையும் பல நூறு கிலோ எடை கொண்டது, அவற்றை இழுத்துக்கொண்டு ஓடும் பொழுது அதன் வேகமும் தாக்கும் திறனும் குறையும், அடக்குவது எளிது. அதேபோல் தான் குறிப்பிட்ட நீளக் கயிறால் கட்டி வைத்து விட்டுக் குறிப்பிட்ட எல்லையைத் தாண்டாமல் அதன் வெளியும், வேகமும் கட்டுப்படுத்தப்படுகிறது. சீறும் காளையை அடக்குவதற்குப் பதிலாக வடத்தை மட்டும் கழுத்திலிருந்து கழற்றி விடுவது இவை அனைத்தும் அனுபவமில்லாத காளை பிடி வீரர்களுக்கு பயிற்சி அளிக்கும் களம் போலத்தான் இருக்கிறது.

**சல்லிக்கட்டு**

சல்லம் என்றால் நார் என்று பொருள். கற்றாழையிலிருந்து எடுக்கப்படும் நாருக்குச் சல்லி நார் என்று பெயர். வேளாண்குடி மக்கள் இந்த நாரைக் கொண்டு மாடுகளுக்கான மூக்குக் கயிறு கழுத்துக் கயிறு, பிடி கயிறு, தாம்புக் கயிறு எனப்பல கயிறுகளைத் தயாரித்துப் பயன்படுத்தி வருகின்றனர்.

பொங்கல் விழாவில் மாட்டுப் பொங்கலன்று இந்த நாரைக்கொண்டு ஒரு சன்னமான மணிக்கயிறு செய்து அதில் நாரை வரிசையாகத் தொங்கல் பின்னக் காளையின் கழுத்தில் கட்டுவர். ஏறுதழுவல் அன்று காளையைத் தொழுவில் விடுவர். ஏறுதழுவும் வீரர்கள் காளையைத்

தழுவி அதை அடக்கியதற்கு அடையாளமாக காளையின் கழுத்தில் கட்டியிருக்கும் சல்லித் தொங்கலை அவிழ்த்து விட வேண்டும். ஏறு தழுவும் விழாவில் இந்தச் சல்லி வெற்றியின் சின்னமாக விளங்குவதால் இதற்கு சல்லிக்கட்டு என்னும் பெயர் வழங்கலாயிற்று என்பர்.

சல்லி என்றால் காசு, கட்டு என்றால் பரிசுத்தொகையின் கோர்ப்பு. மாட்டின் கொம்பில் கட்டப்பட்ட பரிசுத் தொகையை எடுப்பதால் சல்லிக்கட்டு என்று பெயர் வந்தது என்ற கருத்தும் உண்டு. பெருவெளிப்பாதைகளில் பொங்கல் திருவிழாவின் போது மாட்டை அவிழ்த்து விட்டு இளைஞர்கள் விரட்டிச் சென்று அணையும் பழக்கம் இருந்தது. ஜமீன்தாரர் முறைக்குப் பிறகு ஓரிடத்தில் கேலரி அமைத்து வாடிவாசல் வழியாக எருது விடும் வழக்கம் வந்தது என்பார் காந்தி ராஜன். ஏறு தழுவுதலில் தொழுவிலிருந்து வகை வகையான மாடுகளை விட்டு பொதுவர்கள் தழுவுகிற முறைக்கு மிக நெருக்கமாக இருப்பது சல்லிக்கட்டு தான். காலப்போக்கில் நாயக்கர்களின் வருகைக்குப் பின்பு ச என்பது ஜ என்பதாக மாறியிருக்கலாம். அவர்களின் குல தெய்வம் ஜக்கம்மாள் தானே.

**ஏறு தழுவல்**

கலித்தொகை கூறும் ஏறு தழுவல் தொழுவில் எருதுகளை விட்டு எருதுகளைத் தழுவும் இளைஞர்களுக்கு தம் பெண்களை மணம் செய்து கொடுக்கும் மகட்கொடைத் திருவிழாவாக நடத்தப்படுகிறது. தமிழ்ச் சமூகத்தில் ஏறு தழுவலுக்கான தடயங்களைக் காண்போம்.

**ஏறு தழுவலின் தடயங்கள்**

தமிழ்ச்சமுகம் நீண்ட தொடர்ச்சியான அறுபடாத பண்பாட்டுக் கூறுகளை இன்னும் தன்னகத்தே கொண்டுள்ள பழஞ்சமூகம் என்பதை அடையாளப்படுத்தும் நல்ல ஏதுக்களுள் ஒன்று ஏறு தழுவுதல். சங்க இலக்கியத்தை நடுவாந்திரமாகக் கருதினால் அதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் முந்திய தொல்லியல் ஆவணங்களையும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிந்திய இலக்கிய நடைமுறையிலும் இருக்கிற தரவுகளின் அடிப்படையில் அதனை தொடர்பு படுத்திக் காணமுடியும். சங்காலத்திற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய சிந்துச் சமவெளி நாகரிகத்தின் பகுதியான மொகஞ்சதாரோவில் கிடைத்த மாடு அணையும் கல் முத்திரையும், தமிழகப் பாறைகளில் கிடைத்துள்ள பழம் ஓவியங்களும் கலித்தொகை காட்டும் ஏறுதழுவலின் சித்திரவடிவம் என்றும், சங்கச்சமூகத்திற்கு இரண்டாயிரமாண்டுகள் பிந்திய இன்றைய சமகாலத் தமிழ்ச் சமூகத்தால் சிற்சில மாறுதல்களுடன் ச(ஜ)ல்லிக்கட்டு, எருதுகட்டு, மஞ்சுவிரட்டு, எருதுவிடுதல், மாடு அணைதல், என்ற இன்னும் பல்வேறு பெயர்களால் நடத்தப்படுபவைதான் ஏறுதழுவலின் நிகழ்த்துவடிவம் என்றும் கருதினால் தவறில்லை.

**மொகஞ்சதாரோ கல்முத்திரை**

புதுதில்லி தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள மாடு அணையும் கல்முத்திரை மொகஞ்சதாராவில் 1930ல் கண்டறியப்பட்டது. இதுகுறித்து ஆய்வு செய்த ஐராவதம் மகாதேவன் போன்ற அறிஞர்கள் இது ஏறுதழுவுதலை குறிக்கும் சின்னம் என்பதை தெளிவுபடுத்தியுள்ளனர்.

வளைந்த கொம்புகளுடைய ஒற்றை எருது மூர்ககமான கோபத்துடன் முதுகுப்புறமாக கழுத்தை திருப்பி விட்டு விரைந்து முன் நகர்ந்து மாடு அணையும் மனிதர்களை முட்டி வீச அவர்களில் இருவர் காற்றில் மிதப்பது போலவும், ஒருவர் எருதை தாவி அணைவது போலவும், மற்ற இருவர் முன்பின்னாக தலைகுப்புற கீழே விழுவதுமாக காட்சிப்படுத்தபட்டுள்ளது. இதனைக் கூர்ந்தாய்வு செய்த ஐராவதம் மகாதேவன் அது பல மனிதர்களைக் குறிக்கவில்லை. மாறாக ஒற்றை எருதை அடக்க முயன்ற ஒற்றை மனிதன் கொம்பால் முட்டப்பட்டு காற்றில் வீசப்பட்டு

கீழேவந்து விழுகிற மெல்லசைவுக் காட்சிதான் என்று விளக்கியுள்ளார். எனவே தொல் திராவிட நாகரிகமென அஸ்கோபர்போலோ போன்றவர்களால் கருதப்படக்கூடிய சிந்துவெளியில் கிடைத்த ஆதாரம் ஏறுதழுவுதக்கான பாரம்பரியத்தை விளக்கக் கூடியதே!

**பாறை ஓவியங்கள்**

பாறைத் தொல்லியல் வரலாற்று அறிஞர் காந்திராஜன் 2004ல் நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகில் உள்ளது. கரிக்கையூரில் கண்டறியப்பட்ட பாறை ஓவியங்களில் ஏறுதழுவுதலைக் குறிக்கும் ஓவியமும் ஒன்று. கூரிய கொம்புகளும், சிலிர்த்த திமில்களும் கொண்ட மூன்று எருதுகளைப் பலர்கூடி விரட்டுவது போன்ற ஓவியம் கவனிக்கப்பட்ட வேண்டியது. இதன் காலம் கி.மு 2000– 1500 ஆக இருக்கலாம் என்கிறார். அதேபோல உசிலம்பட்டிக்கு அருகே கல்லூத்து மேட்டுப்பட்டியில் திமிலுடன் கூடிய ஒரு காளையை மனிதன் ஒருவன் அடக்க விரட்டுவது போன்ற கிமு 1500 ஆம் ஆண்டு ஓவியமும் அவரால் கண்டறியப்பட்டுள்ளது. தேனி மாவட்டம் மயிலாடும்பாறைக்கு அருகில் அருகவெளியில் உள்ள சித்திரக்கல் புடவில் திமிலுடன் கூடிய காளையின் ஓவியம் புதுச்சேரி பல்கலைக்கழக ஆய்வாளர் பாலமுருகனால் கண்டறியப்பட்டது. இவை அனைத்தும் ஏறுதழுவலுக்கும் தமிழகத்திற்குமான பழம் தொடர்பைக் காட்டுபவையே!

**பண்டைய தமிழ் இலக்கியங்களில் ஏறுதழுவுதல்**

பண்டைய தமிழ் இலக்கியங்களில் பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள மலைபடுகடாம், சங்கஇலக்கியத் தொகுப்பின் காலத்தால் சற்று பிந்திய நூலெனக்கருதப்படும் கலித்தொகை, சங்கமருவிய கால நூலான சிலப்பதிகாரம் ஆகியவற்றில் ஏறுதழுவுதல் இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

மலைபடுகடாம் ஏறுதழுவலை நேரடியாகப் பேசவில்லை. ஆனால் ஏறுதழுவலோடு தொடர்புடைய காளைகளுக்கிடையேயான பொருதுதல்கள் பற்றிய குறிப்பைக் காட்டுகிறது.

“இனத்தின் தீர்ந்த துளங்கு இமில் நல் ஏறு, மலைத் தலை வந்த மரையான் கதழ் விடை, மாறா மைந்தின் ஊறுபடத் தாக்கி, கோவலர் குறவரோடு ஒருங்கு இயைந்து ஆர்ப்ப,வள இதழ்க் குழவியும் குறிஞ்சியும் குழைய நல ஏறு பொரூஉம் கல்லென் கம்பலை;” (மலை 330 –35)

தம் கூட்டத்திலிருந்து பிரிந்து வந்த அசையும் திமிலுடைய ஏறும் காட்டுப்பசுவின் விரைவும், காற்றைப் போன்று சீறிப்பாயும் போர்த் தொழில் பயின்ற காளையும், தம்முள் பொருந்திய அடைந்த வெற்றியைக் குறவரும் கோவலரும் தம் வெற்றியாக ஒருங்கே கூடி கொண்டாடி மகிழ்ந்தனர் என்கிறது பாடல்.

கலித்தொகையும் ஏறுகளுக்கிடையேயான பொருதுதல்களைக் காட்டுகிறது.

“துளங்கு இமில் நல்ஏற்றினம் பல – களம்புகும் மள்ளர் வனப்பு ஒத்தன. தாக்குபு தம்முள் பெயத்த்து ஒற்றி, எவ் வாயும் வைவாய் மரப்பினான் மாறாது குத்தலின் மெய்வார் குருதிய ஏறெல்லாம் – பெய்காலைக் கொண்டல் நிரை ஒத்தன.”

தமக்குள் மாறுபட்டுச் சண்டையிட்ட ஏறுகள் போர்க்களம் புகும் வீரர்களை ஒத்திருந்தன. அப்படி கூரிய கொம்புகளால் மாறாமல் எவ்விடத்தும் குத்துவதால் அவற்றின் உடம்பினின்றும் செங்குருதி வடிந்தது. இப்பாடல் குறிக்கும் மறைமுகமான கருத்து என்னவென்றால் எருதுகள் தமக்குள் இடும் சண்டைகளில் தான் குருதி சிந்துமே தவிர மனிதர்களுடனான பொருதுதலில் அல்ல என்பதுதான்.

கலித்தொகையும், சிலப்பதிகாரமும் பேசுகிற ஏறுதழுவல் என்பது முறைப்படுத்தி ஒழுங்குபடுத்தப்பட்ட தம் மகளிரின் இல்லற வாழ்விற்குத் தோதான தம் குலத்தை சார்ந்த காளையினை தேர்வு செய்யும் ஏற்பாடாக நடத்தப்படுகிற வளர்ச்சியடைந்த காலத்தைச் சேர்ந்த போட்டியாக உள்ளது.

சிலப்பதிகாரத்தில் ஆயர்குலத்தைச் சேர்ந்த கன்னியரான இளங்கோதையர் எழுவர் தம் மணவினைக்கான ஏறுதழுவல் போட்டிக்காக தனித்தனி எருதுகளை வளர்த்த செய்தி இடம் பெற்றுள்ளது.

ஆங்கு,

**'தொழுவிடை, ஏறு குறித்து வளர்த்தார் எழுவர் இளங்கோதையார்'** – (ஆய்ச்சியர் குரவை 4)

மேலும் எந்தக் காளையை அடக்கியவனுக்கு எந்தப் பெண்ணை மணம் செய்து கொடுக்கப்படும் என்ற அறிவிப்புச் செய்து போட்டி நடத்தும் வழக்கம் இருந்ததும் தெரிகிறது.

“நெற்றியிலே சிவப்புச் சுட்டியுடைய காளையை அடக்கியவனுக்கே இப்பொன்னாலாகிய தொடியணிந்த பெண்ணின் தோள்கள் தழுவுவதற்கு உரியன!

வலிமிக்க அவ் இளைய ஏற்றினைத் தழுவி அடக்கியவனுக்கே இம்முல்லை மலரைச் சூட்டிய பூங்குழலாள் உரியவளாவாள்!

நுண்மையான புள்ளிகளையுடைய வெள்ளையேற்றை வென்றவனுக்கே கொடி போன்ற இப்பெண்ணின் அழகிய தோள்கள் உரியனவாகும்!

அழகிய பொன்னிறப் புள்ளிகளையுடைய வெள்ளை ஏற்றினை வென்றவனுக்கே இந்த அழகிய கொடி போன்றவளின் வென்முலைகள் தழுவுவதற்கு உரியன!

அனைவரையும் வெற்றி கொண்ட இந்த இளைய ஏற்றை ஊர்ந்தானுக்கே இக்கொன்றைப்பழம் போன்ற பூங்குழலாள் உரியவளாவாள்.

தூய நிறமான அவ்வெள்ளையை வென்றவனுக்கே இப்பூவைப் புதுமலராள் உரியவலாவாள் (ஆய்ச்சியர் குரவை).

சிலப்பதிகாரத்தில் இப்படியான அறிமுகம் மட்டுமே இருக்க கலித்தொகையோ ஆயர் பெருமக்கள் தம்மக்களை உரிமை கொள்வதற்கான போட்டியில் அடக்க வேண்டிய ஏற்றினங்களை வரிசைப்பட அறிவித்து தொழுவில் இறக்கி, அவற்றிற்குரிய கன்னியர்களை அலங்கரித்துப் பரணில் இருத்தி முழக்கங்களொடு தொடங்குகிற ஏறுதழுவலில் அக் காளையினங்கள் களத்தில் எதிர்கொண்ட வீரர்களின் குடர்களை குத்திக் குலைத்தும் கொம்புகளில் தூக்கி அலைக்கழித்தும் அடக்கப் போதிய பயிற்சியில்லாமல் தலையிலே விழுந்தவர்களை முட்டாது விட்டுச்சென்ற பாங்கையும், தம் களவுக்காதலிகளை அடையும் பொருட்டு வீருகொண்டு எழுந்து அடக்கிய காளையர்களின் திறனையும், அதன் பின்னான குரவை ஆடலையும், சுவை பட இயல்பாக காட்சிப்படுத்தியிருப்பதோடு அவற்றை அடக்கத் திரண்டு வந்திருக்கிற இளைஞர்களின் பொருளாதாரப் பின்புலத்தோடு விளக்குவதும் மிக முக்கியமான ஒன்று. இப்பின்னணி அங்கு நடைபெற்ற ஏறுதழுவலின் தன்மையை விளங்கிக் கொள்ளவும் உதவுகிறது.

**நடப்பு சல்லிக்கட்டு**

இலக்கியங்களிலும் புனைவுகளிலும் பார்த்த சல்லிக்கட்டிலிருந்து தற்கால நடப்பு சல்லிக்கட்டையும் இணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. எஸ்.ராமகிருஷ்ணன் சிராவயல்

சல்லிக்கட்டில் தம் நேரடி அனுபவமாகக் கண்டதைச் செய்துள்ள பதிவு, முப்பது வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒற்றைக் கண் காளையை வெறும் காக்கி டவுசர் அணிந்த வெற்றுடம்புடன் பொருதிய சல்லிக்கட்டுக் காட்சியின் இறுதிப் பகுதி மாட்டுக்கும் மனிதனுக்குமான பந்தத்தைக் காட்டுகிறது.

"மாட்டினை அவன் வீழ்த்திவிட்டதாக நினைக்கிறான். வெற்றி அவன் கண்களுக்கு தெரிகிறது. அவன் மெல்ல தன்பிடியைத் தளர்த்துகிறான். இதற்காகவே காத்திருந்தது போல அந்த மாடு ஆவேசமாக சீறித் துள்ளுகிறது. அவன் நிலைதடுமாறுகிறான் மறுபடி பிடி வலுவாக கிட்டவில்லை. அவன் தடுமாறி கிழே விழுகிறான். கூட்டம் கத்துகிறது. மாடு புழுதி எழும்ப அவனை தூக்கி மேலே வீசுகிறது. அவன் பறக்கிறான். தரையை அவன் தொடும்முன்பாக மாடு மறுபடியும் தாக்க கொம்பை முட்டுகிறது. அவன் புரள்கிறான். ஒரு குத்து விழுகிறது. அவன் எழுந்து கொள்ள முயன்று முடியாமல் புரள்கிறான். அதற்குள் தொலைவிலிருந்து நாலைந்து பேர் அவனைக் காப்பாற்ற ஓடிவருகிறார்கள். மாடு கிழே விழுந்துகிடந்தவன் அருகே போகிறது. அவன் பூமியில் விழுந்து கிடக்கிறான். அவனது அரைடவுசர் கிழிந்து புழுதியோடு விதைக்கொட்டைகள் வெளியே தெரிகின்றன. அவன் வயிற்றை மாடு குத்திகிழிக்கப் போகிறது குடல் சரிய அவன் சாகப்போகிறான் என்றே கூட்டம் நினைத்தது.

ஆனால் அந்த மாடு விழுந்துகிடந்தவனின் முன்பு வந்து ஒரு கற்றுசுற்றிவிட்டு நின்று கொண்டது. அவன் விழுந்து கிடந்தபடி மாட்டையே பார்த்துக் கொண்டிருந்தான். யாரும் மாட்டை நெருங்க முடியவில்லை. பிறகு மாடு தானாக விலகி சற்றுத் தள்ளிப்போய் நின்றது. நாலைந்து பேர் பாய்ந்து அவனைத் தூக்கினார்கள். அவன் மைதானத்தில் இருந்து வெளியேறி போகும்வரை அந்த மாட்டையே பார்த்து கொண்டேயிருந்தான். அவனது குருதி வழிந்து மணலில் உறைந்து போயிருந்தது. அந்த மாட்டை மூன்று பேர் சேர்ந்து பிடித்து அடக்கினார்கள். அவ்வளவு ஆவேசமான பொருந்துதலை என் வாழ்வில் அன்று தான் கண்டேன்.

அவன் பல வருசமாக அந்த மாட்டைப் பிடிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறான் என்றும் இன்று ஒரு பழைய கணக்கு தீர்க்கபட்டிருக்கிறது என்றும் உள்ளூர்ப் பூசாரி சொன்னார். என்னால் நம்பவேமுடியவில்லை. தன்னைப் பலமுறை வென்ற மனிதனை ஏன் மாடு குடலைக் கிழிக்காமல் வெளியே விட்டது? என்ன உறவு அது. அந்த மாட்டினை அந்த மனிதன் மிகவும் நேசித்தான் என்கிறார்கள். அவன் ஜல்லிகட்டில் பிற மாடுகளைப் பிடிப்பதைவிட இதற்காகவே வருகிறான் என்றும் அவனது ஊர் சிங்கம்புணரி என்றும் சொன்னார்கள். அவன் என்ன வேலை செய்கிறான் என்று கேட்டேன். ரிசர்வ் போலிஸில் வேலை செய்கிறான் என்றார்கள். அதை வளர்ப்பது ஒரு பெண் தான் என்றார்கள். எனக்கு அந்த மாட்டின் வீட்டிற்குப் போய் காண வேண்டும் போலிருந்தது. மறுநாள் சிங்கம்புணரியில் உள்ள அந்த மாட்டின் உரிமையாளர் வீட்டிற்குப் போயிருந்தேன். அதே மாடு தொழுவத்தில் நின்றிருந்தது. மாடு ஜல்லிகட்டில் இருந்து வந்தவுடன் அதற்கு மஞ்சள் பத்து போட்டு விசேசமாக அரைக்கபட்ட தானியங்கள் அரிசி அரைத்த கலவை கலந்து உணவைத் தந்திருக்கிறார்கள். நேற்று பார்த்த அந்த ஆவேசம் இன்று மாட்டிடம் இல்லை. இது தளர்ந்திருந்தது. அடுத்த வருசம் அதை அனுப்பமுடியுமா என்று தெரியவில்லை. இந்த வருசமே சண்டை போட்டு தான் அதைச் சேர்த்தேன் உரிமையாளர். அந்த மாட்டினை ஜெயித்த ஆளைப் பற்றி கேட்டேன். அவன் பலமுறை இந்த மாட்டினை அடக்கியிருக்கிறான். தோற்றுபோய் திரும்பும் மாடுகள் சில நாட்களுக்கு ஒடுங்கியே இருக்கும். வீட்டுப் பெண்கள் அதைக் கடுமையாக திட்டுவார்கள். மாட்டிற்கு அது புரியவே செய்கிறது என்றார். மாட்டின் கண்களில் முந்திய நாளின் ரௌத்திரமில்லை. அது ஈரம் ததும்பியிருந்தது. அதை அடக்க முயன்று காயம்பட்டவன் மருத்துவமனையில் சேர்க்கபட்டிருந்தான். அது ஒரு பந்தம் மாடுகளுக்கும் இது விளையாட்டு என்று தெரியும் என்றாள் வீட்டுப்பெண்மணி."

எழுத்தில் பார்த்த சல்லிக்கட்டிலிருந்து எதார்த்த சல்லிக்கட்டில் எளிமை தெரிகிறது. வன்மம் இல்லை. காளை வளர்ப்பவனும் அணைபவனும் காளையும் ஒரே தளத்தில் இருக்கின்றன. அதிகாரம் படைத்தவர்களின் உடைமையாக மாறும் பொழுதுதான் குரோதம் பிறக்கிறது என்பதைத் தான் இது காட்டுகிறது. இலக்கியங்கள் கூறும் ஏறு தழுவலில் இருந்த மகட் கொடை பணக்கொடையாக மாறியிருப்பதும் (இது தான் சல்லிக்கட்டின் உருமாற்றமாய் இருக்க வேண்டும்) மாட்டை அணைபவன் பெரும்பாலும் உடைமை வர்க்கத்தைச் சேர்ந்தவனாக இருக்க புனைவுகளிலும் நடப்பிலும் அணைபவன் உழைப்பாளியாய் இருக்கிறான். புனைவுகளில் மாட்டின் உரிமையாளன் உடைமை வர்க்கத்தைச் சோந்தவனாக இருக்க இன்றைய நடப்பில் அவன் சாமானியனாகவே இருக்கிறான். இந்த மாற்றம் தான் விரிவான ஆய்வுக்கான களம். இதில் கவனிக்க வேண்டிய முக்கியமான அம்சம் கலித்தொகைக்குப் பிறகு ஏறு தழுவல் இலக்கியத்தில் இடம் பெறவில்லை என்பது தான். உயர்குடி மக்களின் கலையும் கலையும் பண்பாடும் இலக்கிய வடிவம் பெற்றுவிட உழைப்புக் குடிகளின் கலையும் பண்பாடும் வழக்காறுகளாகவும் கதைப் பாடல்களாகவும் புனித இடங்களிலும் புனித நாட்களிலும் நிகழ்த்துதல் சடங்காகவும் இடம் பிடித்து விடுகின்றன.

**பண்பாட்டுத் திருவிழா பொங்கலும் சல்லிக்கட்டும்**

பொங்கல் திருவிழாவில் சர்க்கரைப் பொங்கலும் கரும்பும் சல்லிக்கட்டும் இணைந்தவை. ஒவ்வொரு விழாவும் தனித்த பண்பாட்டு அம்சங்களை கொண்டுள்ளன. “ஒரு சமூகத்தின் விழாக்கள் சடங்கு சம்பிரதாயங்கள் இன்னும் பிற நிகழ்த்துதல்கள் அந்த சமூகத்தின் கூட்டு எடுத்துரைப்பாகும். காலங்காலமாக சமூகநினைவுகளைக் கூட்டாக வெளிப்படுத்துவதும் சமூகங்கள் அவை சேமித்து வைத்திருக்கும் கூட்டு நினைவுகளைச் சடங்குகள் விழாக்கள் மூலம் வெளிப்படுத்துவதோடு அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கடத்துவதற்கு உதவுகின்றன. இவற்றிலிருந்தே சமூகத்தின் ஆதிவரலாற்றை அறியவும் மீட்டெடுக்கவும்” என்கிறார் இனவரைவியலாளர் பால் கன்னர்ட்ன். இன்றைய விழாக்களில் குறிப்பாக இந்துசமய விழாக்களிலிருந்து பொங்கல் விழா வேறுபடுகிற முக்கியமான இடம். “சாதி மத சடங்குகளுக்கு அப்பாற்பட்ட தேசிய இனத்துக்குரிய தமிழருக்கான திருவிழா.

- பிறப்பு இறப்பு தீட்டுக்களால் பாதிக்கப்படாத திருவிழா தைப்பொங்கல் நாளன்று வீட்டில் இறப்பு நிகழ்ந்தாலும் உடலை எடுத்துச் சென்றவுடன் வீட்டைச் சுத்தம் செய்து பொங்கலிடும் வழக்கம் நெல்லை மாவட்டத்தில் இருக்கிறது(தொ.ப.)
- பார்ப்பனர்களாலும் பெருங்கோவில்களாலும் காலங்காலமாக விலக்கப்பட்ட உணவு வகைகளான சேனை, கருணை, சிறுகிழங்கு. பனங்கிழங்கு போன்றவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் பார்ப்பனியப் பண்பாட்டிலிருந்து விலகிய தன்மையுடையது.
- பொங்கலுக்கு முதல்நாள் தும்பைப் பூ, பிரண்டை, ஆவாரம்பூ, வேப்பிலை, மாவிலைகளை இணைத்துக் கட்டுகிற காப்புக்கட்டு திணைச்சமூகத்தின் தொடர்ச்சியைக் காட்டுகிறது.

வேட்டைச் சமூகத்திலிருந்து முல்லைநில வேளாண் சமூகமாக மாறி நெல்லும் கரும்பும் விளைகிற மருதநில நிலவுடைமைச் சமூகமாக முன்னேறிய படிநிலை வளர்ச்சியை பொங்கல் விழாவின் நிகழ்த்துதல்களான காளையை அடக்குதல், பசுவைக் கொண்டாடுதல், பச்சரிசிப் பொங்கல், கரும்பு ஆகியவற்றின் மூலம் அறியலாம். வேட்டைச் சமூக அரைவேட்டைச்சமூக நிலையிலிருந்து வேளாண்சமூகமாக மாறும்பொழுது ஏற்பட்ட “ஆ”க்களின் தேவை அவர்களின் பலியிடுதல் முறையில் பெரும் மாறுதல்களைக் கொண்டு வந்தது. மாடு அணைதல் என்பது

காட்டுவிலங்குகளை விவசாயத்திற்கு பயன்படுத்த வென்று அடக்கியதனை நினைவூட்டும் நிகழ்த்துதல் சடங்கோடும் காளையை அடக்குகிறவன் நிலத்தில் சிந்துகிற ரத்தம் நிலத்தின் வளமைச் சடங்கோடும் தொடர்புடையன என்பதை மஞ்சுவிரட்டு, எருதுகட்டு, சல்லிக்கட்டு, ஆகியவற்றை ஒப்பிட்டுக் கண்டோம். சிந்துச் சமவெளியின் காளை முத்திரையும் திமிலுடன் கூடிய ஏறுகளைத் தழுவும் இரும்புக்கால பாறை ஓவியமும் ஆதிநாதர் சிவனின் காளைச்சின்னமும் இதோடு தொடர்புடையவைதான். உழவுப்பண்பாட்டின் இனவிருத்திக்கு வீரியமான காளைகளை தயார் செய்வதும் மனிதவிருத்திக்கு சரியான காளையரை அடையாளம் காணுவதும் இணைந்ததே சல்லிக்கட்டு. அன்று உயர்ந்த செல்வமாகக் கருதப்பட்டது பெருந்தொகையிலான மாடும் மக்களுமே மனித சமூகத்தையும் இயற்கையையும் கடவுள் படைத்தார் என்ற கருத்துமுதல்வாத சிந்தனைக்கு மாற்றாக மனிதனின் உழைப்பும் இயற்கையையும் விலங்குகளையும் வென்று தம்வசப்படுத்திய முயற்சியும்தான் இப்பொன்னுலகைச் சமைத்தது என்ற பொருள்முதல்வாத இயங்கியலின் நிகழ்த்துதல் சடங்குதான் பொங்கலும் மாடுபிடியும் என்று புரிந்து கொள்ள வேண்டும். சல்லிக்கட்டு தடைக்கும் பன்னாட்டு வர்த்தகத் தந்திரத்திற்கும் உள்ள தொடர்பு குறித்து இன்று சமூக வலைத்தளங்களில் விவாதிக்கப்படுகிற விசயத்திற்கு முற்போக்கு சக்திகளின் பதில் சமூக வலைத்தளங்களில் மௌனமாக இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. மான்சாண்டோ விதைக்கும் பீ.டீ கத்திரிக்காய்க்கும் எதிர்ப்பு வந்த அளவிற்கு இந்திய காளைகளை மலடாக்கி இந்திய பால் வர்த்தக சந்தையை கைப்பற்றும் கார்ப்பரேட் பற்றிய விவாதம் குறைவாக இருக்கிறது. சமூகத்தின் மதிப்பும் பயன்பாடும் இல்லாத எந்த ஒன்றும் நிலைத்து நிற்பதில்லை உதிர்ந்துவிடும். மாப்பிள்ளைக்கல் வரலாற்று எச்சமாகிவிட்ட நிலையில் மாடு பிடிப்பு மட்டும் நீடிப்பதிலிருந்தே அதன் தேவையும் புரியும். பொங்கலோ பொங்கல்! பால் பானை பொங்க பட்டி பெருக! நோவும் பிணியும் தெருவோடு போக! என்று பட்டிபெருக வேண்டும் என்று இயற்கையை வேண்டிப்பாடி வைத்த பொங்கலும் மாடுபிடியும் உழவை வாழ்க்கைப் பண்பாடாகக் கொண்ட வேளாண்மைச் சமூகத்தின் கண்டுபிடிப்பு பட்டி பெருக வேளாண் சமூகத்தின் மரபார்ந்த அறிவு கண்டுபிடித்த ஏற்பாடுதான் மாடுபிடிப்பும் ஏறுதழுவுவதும் சல்லிக்கட்டும் இன்னபிறவும். இன்று இயற்கை வேளாண்மை, இயற்கை உரம், மரபார்ந்த உணவு, சுற்றுச்சூழல் பற்றிப் பேசும்போது தமிழ்மண்ணின் பாரம்பரிய காளையினங்களை அழித்துவிட்டு எப்படி அதனைச் சாத்தியப்படுத்த முடியும்